விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 22 ஸபர் 2 இதழ் 268

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-11-83


## "பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் பலன்களைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்"

### கருணாநிதி கூறுகிறார்

சென்னை, நவ. 7

''இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மீண்டும் இலங்கை சென்றுள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியின் இந்த விஜயத்தின் பலன்களைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.''

இவ்வாறு தி. மு க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று தஞ்சாவூரில் திரு. பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் தொடர்பாக நிருபரொருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். (வெ)

## ரூபராணிக்கு மாத உதவி!

### தமிழக அரசு ஏற்பாடு

(சென்னை)

தமிழகஅரசு குட்டிமணியின் மனைவி ரூபராணிக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவிப்பணமாக வழங்க முன்வந்துள்ளதாக தமிழக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருமதி குட்டிமணிக்கு தமிழக அரசு அதிகாரி ஒருவர் ஏற்கனவே தமிழ்நாட்டில் வீடு ஒன்றை அன்பளிப்பாக வழங்கி உள்ளதாகவும் அவர் கூறினார்.

# ★ ஜனாதிபதி-பார்த்தசாரதி 70 நிமிட சந்திப்பு ★

# விபரம் வெளியிடப்படவில்லை

## தொண்டமானும் சந்தித்தார்

(கொழும்பு)

**இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகள் தொடர்பாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், இந்திராவின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதியும் நேற்றுக் காலை நீண்ட நேரம் பேச்சு நடத்தினர்.**

**நேற்றுக்காலை 10 மணியளவில் நிகழ்ந்த இச் சந்திப்பு 70 நிமிடங்கள் வரை நடந்தது. வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை. சந்திப்பு பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவுமில்லை.**

இலங்கையின் அரசாங்கத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் இரண்டாங்கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் இரவு கொழும்புவந்து சேர்ந்த திரு பார்த்தசாரதி நேற்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் திரு. பார்த்தசாரதி வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீட்டையும், அமைச்சர் திரு. எஸ். தொண்டமானையும் சந்தித்தார்.

இன்று காலை ஜனாதிபதியை மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க முக்கிய பிரமுகர்களையும் பல்வேறு தரப்பட்ட தலைவர்களையும் அவர் இன்று சந்திப்பார்.

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்குவந்துள்ள திரு. பார்த்தசாரதி மேலும் இருநாட்கள் இங்கு தங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

## கூட்டணித் தலைவர்கள் சந்திக்க மாட்டார்கள்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் இந்திராவின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி பார்த்தசாரதியை இங்குள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சந்திக்கமாட்டார்கள், ஆனாலும் அவரது விஜயம் நீடிக்கப்படுமானால் அவரைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.

வடக்கில் இருக்கும் கூட்டணித் தலைவர்கள் கொழும்பில் திரு. பார்த்தசாரதியைச் சந்திப்பார்கள் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவ்வாருன சந்திப்பு

[8-ம் பக்கம் பார்க்க]


பிரபல வைத்திய நிலையம்

# இடமாற்றம்

யாழ். ஆஸ்பத்திரி வீதி, இல: 574/1 இடத்தில்

டாக்டர்கள்

**சம்பந்தன், செல்வரத்தினம், சர்மா**

**வேதநாயகம்**

ஆகியோர் மேற்பார்வையில் நடாத்தப்படும்

**சம்பந்தன் வைத்திய நிபுணர்**

**ஆலோசனை சிகிச்சை நிலையம்**

பொதுமக்களின் சௌகரியம் கருதி

சகல வசதிகளுடன், யாழ். பஸ் நிலையத்திற்கு

அருகாமையிலும்,

யாழ். அரசினர் வைத்திய சாலையின்

புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்திற்கு

(O. P. D.) முன்பாகவும் உள்ள

இராமையாச் செட்டியார் ஒழுங்கையில்

அமைந்த

**யாழ். கல்வி நிலையக்**

**கட்டிடத்திற்கு** [சாந்தி தியேட்டர் முன்பாக]

மாற்றப்பட்டு

தொடர்ந்து வழமைபோல் நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது

என்பதை அறியத் தருகின்றோம்.

9753


## யாழ். நகருக்கு நவீன வடிகால் திட்டம்

### நிதி உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண நகரத்திற்கு நவீன வடிகால் திட்டமொன்றையும், கழிவுப்பொருட்களை குழாய் மூலம் கடலுக்கு அகற்றும் அமைப்பொன்றையும் ஆராய்ந்து அதனை அரசின் நிதி உதவியுடன் அல்லது நிதிநிறுவனத்தின் உதவியுடன் உடனடியாக செய்ய வேண்டும்''.

பிரதமரும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசாவுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார். பிரதமருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

### மன்னார் மாவட்டத்தில்

## அத்துமீறி குடியேறியோர் வெளியேற்றம்!

### அரச அதிபர் நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டப் பகுதிகளிலுள்ள அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்கள் மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதனின் உத்தரவின்பேரில் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்:

இந்த வெளியேற்ற நடவடிக்கைகளை மன்னார் காணி அலுவலகம் மேற்கொண்டுவருகிறது,

உப்புக்குளம், பள்ளிமுனை ஆகிய பகுதிகளில் அத்துமீறிக் குடியேறிய பல குடும்பங்கள் இதுவரை வெளியேற்றப்பட்டு விட்டன.

இதேபோன்று மன்னார் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் வெளியேற்றப்படுவார்கள் என்று மன்னார் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (வெ)

## "கடந்தகாலப் பேச்சுக்கள் பயனுள்ளவையாகும்"

(கொழும்பு)

'இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும், மற்றும் இலங்கையிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுடனும் கடந்த ஆகஸ்ட் மாதம் நான் நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளவையாக அமைந்தன''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்த அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் மேற்படி தெரிவித்தார்.

'இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான பேச்சுக்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நான் தொடர்ந்து நடத்தவுள்ளேன்.

'இலங்கை அரசின் அழைப்பிற்கு இணங்கியே நான் மீண்டும் கொழும்பு வந்துள்ளேன். இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்ததையிட்டு நான மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்' என்றார். (வெ)

## "அநீதி எங்குஇடம்பெறினும் குரல் எழுப்பவேண்டும்"

### காந்தி கற்றுத்தந்ததாக இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, நவ. 7

''உலகில்எங்கு அநீதி இடம் பெற்றாலும் அதற்காகக் குரல் எழுப்பவேண்டும் என்று தேசபிதா மகாத்மா காந்தி எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.''

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எழுமுள்ளி மானிப்பாய் மேற்கில் சேனைப்புலம் எனப்படும் வீடுகட்டக்கூடிய 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T. சம்பந்தர் கட்டைப்பிராய்க்கடை (கட்டைப்பிராய்க்குளத்தடி) கோப்பாய் தெற்கு கோப்பாய். 9747

3 பரப்பு காணி தெல்லிப்பழை சந்திக்கும் ஸ்ரேசனுக்கும் அண்மையில் உண்டு. விபரங்களுக்கு திருமதி சோதி இராசஇரத்தினம் தெல்லிப்பழை சந்தி அல்லது S. P. அழக இரத்தினம் டச்ரோட் தெல்லிப்பழை. 9746

தெல்லிப்பழை தபால்கந்தோர் ஒழுங்கையில் பிரதான வீதிக்கருகாமையில் ஒன்றே முக்கால் பரப்பு காணியும், மின்சார, தண்ணீர் வசதிகளுடன் கூடிய மேல்மாடிவீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆ. ரவிக்குமார் (சீமெந்து தொழிற்சாலைக்கு முன்) பிரதானவீதி காங்கேசன்துறை. 9745

4ம் குறுக்குத்தெரு சின்னக்கடைக்கு அருகாமையில் வீட்டுடன் கூடிய அரை பரப்பு காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: அம்பாள் ஸ்ரோர்ஸ் 4ம் குறுக்குத்தெரு பீச்ரோட் சந்தி யாழ்ப்பாணம். 9744

5 பரப்பு குடியிருக்கும் காணி மருதனமடச்சந்தியிலிருந்து உடுவில் றோட்டில் 300 யார் தூரத்தில் வலது பக்கத்தில் றோட்டு முகப்பு தொடர்பு கொள்க. செல்லத்துரை முன்னாள் விதானையார் பண்டத்தரிப்பு. 9749

சில்லாலை கதிரை மாத கோவிலுக்கு அருகில் உள்ள (6) ஆறு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். யோ பீ. வில்லியம் பீற்றஸ் ரேடியோ சேர்விஸ் அலுக்கை, அளவெட்டி. 9756

வீடியோ ஹெட் விற்பனைக்குண்டு Sony Betamax SL 8000/8080 A. யோகராஜா, மே/பா இளையப்பா, கோண்டாவில் வடக்கு (பஸ் டிப்போ அருகில்) 9758

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக்கர் அன்கோ, 112, கே. கே. எஸ். றோட். யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா, ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவனியா. 9506

யாழ்-நல்லூர் கோவில் முன்பாக நல்ல சூழலில் (கிணற்றுடன்) வீடுகட்டுதற்கேற்ப சதுரக்காணி 1½ பரப்பு விற்பனைக்குண்டு. ம. சி சந்திரபோஸ், இராமலிங்கம்வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23701 (9685)

நல்ல நிலையிலுள்ள றிச்சாட் பீரிஸ் கொம்பனியின் தயாரிப்பு 250 இரும்புக் கதிரைகள் விற்பனைக்குண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 9663 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9663

## தேவை

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம், தமிழ், பயிற்றுவிக்கக் கூடிய ஆசிரியை தேவை. 9-11-83 புதன் 9-00 மணிக்கு காரியாலயத்தில் தகமைச்சான்றுடன் தொடர்பு கொள்ளவும். Director Bitsman Institute Jaffna Rd. Manipay. 9757

தமிழ், ஆங்கில எழுத்துக் கோப்பாளர்கள் பிளேட்டின், சிலிண்டர் மெஷின் மைண்டர்கள் உடன் தேவை. அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430 காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 9761

வர்த்தக நிறுவனமொன்றிற்கு எஸ்-லோன் பைப் பிற்றிங்ஸ் (Fittings) செய்வதில் நல்ல அனுபவம் வாய்ந்த தொழிலாளர் உடன்தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 9723. மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம் 9723

எமது ஹோட்டலை மேற்பார்வை செய்ய (Supervisor) 45-50 வயதுடைய ஆங்கில அறிவுடைய திடகாத்திரமானவர் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் மாலை 3-00 மணிக்கும் 5-00 மணிக்குமிடையில் சமுகந்தரவும். ஹோட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 9716

செவ்வாய் தோஷமுள்ள 28 வயது நிரம்பிய அழகும் பண்பும் நிரம்பிய 5 1/2 அடி உயரமுள்ளவரும் மாதம் ரூபா 1000/- வருமானம் உள்ள இந்து வேளாள குலப் பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. பொறியியல் பட்டம்பெற்று அல்லது வேறு நல்ல உயர்ந்த பதவியில் உத்தியோகம் புரிபவர்கள் விரும்பப்படுவர். வீடு, நகை காணியும் காசும் சீதனமாக உண்டு. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9699 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9699

## வகுப்புக்கள்

இலங்கை வானொலியின் நிலைய வித்துவான் திருமதி லீலாவதி இரத்தினசிங்கம் வீணை/வாய்ப்பாட்டு வகுப்புக்கள் நடாத்தவுள்ளார். விபரங்கட்கு: நேரில் தொடர்பு கொள்ளவும். ''மாரக்காய்'' புலோலி தெற்கு புலோலி. 9752

## பயிற்சி

Computer Programming' ரெலிவிசன் வீடியோ டெக்னிப்பியறிங், எலக்ரிக்கல், வயறிங், எயர்கொண்டிசனிங், Hotel Management, வெல்டிங், French பயிற்சிகள் ஆரம்பம் 14-11-83 (சகல பயிற்சிகளிற்கும் இரண்டுமாத செய்முறை பயிற்சியளிக்கப்படும்) விபரங்கட்கு The School of computer Studies, கனகரத்தினம் கட்டிடம் ஸ்ரான்லி வீதி. (றெயில்வே கடவைக்கு அருகாமை), யாழ்ப்பாணம். 9653

அகதிகள்

## புனர்வாழ்வுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூ சங்கம் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்ட நிதியத்திற்கு ரூபா 18,138 அன்பளிப்பாக வழங்கியுள்ளது. மேலும் நிதி சேகரித்து வழங்க சங்க இயக்குனர் சபையும், பணியாளர்களும் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார்கள்

## வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கும் மற்றும் விசேஷங்களுக்கும் றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பினால் செய்யப்பட்ட இரும்புக்கதிரைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கலா கிறைண்டிங் மில், திருநெல்வேலி சந்தி திருநெல்வேலி அல்லது S. கனகலிங்கம் C/o நாகராஜா மாஸ்ரர் முருகன் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 9664

முசலி வடக்கு தெற்கு ப. நோ. கூ. சங்கம் (ம/ப)

## வெற்றுச் சாக்கு விற்பனை

முசலி வடக்கு தெற்கு ப. நோ. கூ. சங்கத்திற்குச்சொந்தமான 5087 வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் கடைசித் திகதி 15-11-1983.

மேலதிக விபரங்களுக்கு சங்கப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எம். ஏ. ஜலால்தீன்
தலைவர்
வேப்பங்குளம்,
பி. பி. பொற்கேணி.
26- 0-83 9729

## பெயர் மாற்றம்

கலாசாலை வீதி திருநெல்வேலி என்ற விலாசத்தை சேர்ந்த சபாபதி மருதப்பா என்பவராகிய நான் இன்று தொடக்கம் (8-11-83) எனது பெயரை சபாபதி முரளீதரன் என வழங்குவதுடன் சகல ஆவணங்களிலும்குறிப்பிடுகின்றேன் என்பதை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
சபாபதி முரளீதரன்
1-11-83
9755

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

புதிய ஆங்கில வகுப்புகள்

**BASIC & Intermediate ] ENGLISH CLASSES**

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்கட்கும் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

ஆரம்பம்: 9-11-83 காலை 9-00 மணி

15 2/4, மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

## எங்கள் புதிய வெளியீடுகள்

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா நடித்த
“ஆயிரத்தில் ஒருவன்”
(V. G. P. ORIGINAL)—கலர்

★ கமல் ★ மாதவி நடித்த
“நீதிதேவன் மயக்கம்”
(THOMSON ORIGINAL)

உங்கள் ஓடர்களை உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள். மேலும் புதிய பல வெளியீடுகளை (ORIGINAL COPIES) மிக விரைவில் எதிர்பாருங்கள்.

**குணம் வீடியோ சென்டர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (9759)

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

இருபாலை — கோப்பாய்

## 84&85 A/L CLASSES

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. சின்னத்தம்பி SAT, SUN. 8-00 A. M. |
| வர்த்தகம்: | திரு. செல்வநாயகம் SAT, SUN. 7-00 A. M. |
| தமிழ்: | திரு. குழந்தைவேலு SAT, SUN. 9-00 A. M. |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் TUE, FRI. 4-15 P. M. |
| இந்துநாகரிகம்: | திரு. காரை. சுந்தரம்பிள்ளை MON, WED. 4-15 P. M. |
| அளவையியல்: | திரு. மூர்த்தி SAT, SUN. 3-00 P. M. |
| புவியியல்: | திரு. சண்முகராஜா SAT, SUN. 2-00 P. M. (9737) |

# சாயி ரெலி ரேப்

புதிய யுக்திகளுடன்
புதுமையான (STEREO) படப்பிடிப்பு

புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள் வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ படப்பிடிப்புச்செய்பவர்கள்.

**சாயி ரெலி ரேப்**

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகுவைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்

இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில் எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில் வீடியே படப்பிடிப்புச் செய்துகொள்ள

சாயி ரெலி ரேப் தொலைபேசி: 23759

விபரங்களுக்கு:
**ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்**
141, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22660

○ குறிப்பு: கேக் தயாரிப்பதற்கா... சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
9701

# அரபாத்தின் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் கடும் சண்டை!

பெய்ரூட், நவ. 7

**பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத்தின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கு மிடையே வட லெபனனில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டது.**

இச்சண்டையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சிக்கியுள்ளதாகவும் தெரிவிககப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகளிலும், அரசாங்கக் கட்டிடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இதே நேரத்தில் லெபனனின் வடக்குத் துறைமுக நகரை நோக்கி அரபாத்தின் படைகள் முன்னேறியுள்ளதாகவும் கூறப்பட்டது.

அரபாத்தின் எதிர்ப்பாளர்கள் பலர் அவர்கள் தங்கியிருந்த முகாம்களிலிருந்தும் வெளியேறியுள்ளதாகவும், அதே வேளை இச்சண்டைகுறித்து அரபுத் தலைவர்கள் ரியூனிசியாவில் கூடி ஆராய்ந்து வருகின்றனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எகிப்திய அதிபர் ஜனுப் ஹொஸ்னி முபாரக், இச்சண்டையில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்திற்குத் தனது முழு ஆதரவையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி கருதியே இவ் ஆதரவை வழங்குவதாகவும், இவ்வியக்கத்திற்கு மற்றொருவர் தலைவராக வருவதைத் தாம் விரும்பவில்லையென்றும் எகிப்திய அதிபர் முபாரக் தெரிவித்துள்ளார்.

## ஐ. நா. உணவு ஸ்தாபன மகாநாடு

ரோம், நவ.7

ஐ. நா. உணவு ஸ்தாபனத்தின் 3ம் நாள் மகாநாடு நேற்று ரோமில் ஆரம்பமாகியுள்ளது. இம்மகாநாட்டில் உலக உணவுப் பிரச்னைபற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இம்மகாநாட்டில் 152 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

(வெ)

## மகாவலித்திட்டத்தில் வருடாந்தம் 10,000 குடும்பம் குடியமர்த்தப்படும்

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'பி' பிரிவிலும், 'சி' பிரிவிலும் வருடாந்தம் 10,000 விவசாயக் குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளதாக மகாவலி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அடுத்த பல ஆண்டுகளில் மகாவலித் திட்டத்தில் 47,000 ஆயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது

இவைகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(வெ)

## ஜனாதிபதி றீகன் நாளை ஜப்பான் விஜயம்

வாஷிங்டன், நவ. 7

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் றீகன் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு புதன்கிழமை ஜப்பான் செல்லவுள்ளார்.

இவர் அங்கு ஜப்பான் பிரதமர் திரு. நாகஸோனியைச் சந்தித்து தென் கொரிய விவகாரம், ரங்கூன் குண்டுவெடிப்புச் சம்பவம், சர்வதேச விவகாரம், இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அதேவேளை ஜனாதிபதி றீகனின் விஜயத்தை எதிர்த்து டோக்கியோவிலும், வடக்கு ஜப்பானிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று டோக்கியோவில் அமெரிக்கத் தூதரகத்திற்கு எதிரே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 9 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அமெரிக்காவின் அணுசக்தி ஏவுகணைக் கொள்கைகளை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

(வெ)

## இலங்கைத் தமிழர் பிரச்னை: இந்திராவின் ராஜதந்திர முயற்சிக்கு பாராட்டு

சென்னை, நவ.7

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மேற்கொண்டுவரும் ராஜதந்திர முயற்சிகளுக்கு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸின் செயற்குழுக்கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

மதுரையில் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு இந்திரா காங்கிரஸின் செயற்குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு தனிநாடு வழங்க வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள சில அரசியல்கட்சிகள் கோரிவருவது அவற்றின் பிரிவினைவாதப் போக்கைத்தான் காட்டுகிறதென்றும் இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(வெ)

## பனம் விதை நடுகை இயக்கம்

(புலோலி)

பனம்விதை நடுகைவாரத்தை முன்னிட்டு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனம் விதை நடுகை இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உடுவில் உதவி அரச அதிபர் திரு ஏ.சி.செபநாயகம் பனம் விதை நாட்டி, பனம் விதை நடுகை வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

உதவி அரச அதிபர் அலுவலகவளவு, வீதிஓரங்கள் காணிகளில் பனம் விதைகளை நாட்டுவதில் பொதுமக்கள் உற்சாகம் காட்டினர்

இவ் வைபவத்தில் கிராம சேவை அலுவலர்கள், பனை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு சி.கிருஷ்ணமூர்த்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு சோ.கோகுலதாசன் ஆகியோரும் சமூகம் அளித்திருந்தனர். உடுவில் மான் தமிழ்க்கலவன் வித்தியாலய மாணவ மாணவிகளும் பனம் நடுகையில் ஈடுபட்டனர். [சூ)

## "படைப்பாளிகளை சூழ்நிலை என்றுமே மறப்பதில்லை!"

(மானிப்பாய்)

தமிழ் ஒலி வானொலி நேயர் மன்றத்தினர் சிறு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் யாழ். நகரில் கருத்தரங்கு ஒன்றை நடாத்தினர்கள். திரு. எஸ். உமாகாந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ஏராளமான மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சிவபாலசுந்தரம், திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோர் சமுகமளித்து உரையாற்றினர்.

"உண்மையான படைப்பாளிகளை சூழ்நிலைகள் பாதிப்பதில்லை. சூழ்நிலையை தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு இலக்கியம் படைக்கவேண்டும். அம்பிகாபதி இறந்தபின்னரே கம்பர் 'தசரதன் புலம்பல்' பகுதியை பாடினார். இதை எமது இளம் படைப்பாளிகள் உணரவேண்டும்" என திரு சிவபாலசுந்தரம் தமது உரையில் குறிப்பிட்டார்.

வானொலியில் தரமான ஆக்கங்கள் ஒலிக்க நேயர்கள் எவ்வாறு உதவலாம் என எடுத்துக்காட்டி உரையாற்றிய திரு. நாகேஸ்வரன், நேயர்கள் பாடல்களை விரும்பிக்கேட்டு. தமது பெயர் வானொலியில் ஒலிக்கவேண்டுமென்ற மனப்பான்மையுடன் செயற்படாது சிறியவைகளானாலும் சொந்த ஆக்கங்களுடன் பெயர் ஒலிப்பதை ஆர்வத்துடன் விரும்பி அதற்கான வழிவகைகளைக் கையாளவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

மன்றத்தின் அடுத்த கருத்தரங்கு டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறுமென அமைப்பாளர் திரு. எஸ். உமாகாந்தன் அறிவித்துள்ளார்.

## சீனஉதவி அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

சீனவின் உதவி வெளிநாட்டமைச்சர் திரு. ஹொங் டாப்பே நேற்று முன்தினம் இலங்கைவந்து சேர்ந்தார்.

இவர் இலங்கை வெளி நாட்டமைச்சர் ஜனப் ஷாகுல் ஹமீத்துடனும், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும் சர்வதேச விவகாரங்கள், மற்றும் இருதரப்பு உறகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சீனவின் உதவி வெளிநாட்டமைச்சர் இலங்கையின் புதிய பாராளுமன்றம், பண்டாரநாயக்கா சர்வதேசமகாநாட்டு மண்டபம், சுதந்திரவர்த்தக வலயம் ஆகியவற்றையும் பார்வையிடவுள்ளச்ர். (வெ)

## பஸ் விபத்து 5 பேர் பலி!

சென்னை, நவ.7

ராமநாதபுரம்மாவட்டத்தில் நேற்று தமிழ்நாடு மாநில அரசின் பஸ் ஒன்றும், உல்லாசப் பயணிகள் பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் 5 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள். 9பேர் பலத்தகாயமடைந்தனர்.

(வெ)

## சிறந்த சேவைக்கு விருது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக மிகச் சிறந்த சேவையாற்றியதற்கான விருது, ஸ்ரீசண்முக வித்தியாலய அதிபர் செல்வி இராசனச்சியார்விஸ்வலிங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை ரேட்டரிக் கழகம் இவ்விருதை வழங்கியுள்ளது.

கடந்த வாரம் இவ்விருது வழங்கும்வைபவம் திருகோணமலை சமூகசேவை மண்டபத்தில் நடைபெற்றது.

## அகதிகள் பனம் விதை நாட்டினர்

(புலோலி)

கைதடி அகதிகள் முகாமில் உள்ள அகதிகள் பனம் விதை நடுகை இயக்கத்தை மேற்கொண்டுள்ளனர். இவ் அகதிகள் முகாமில் பனம் விதை நடுகை இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கைதடி அகதிகள் முகாமில் இருந்து கண்டி வீதியில் ஒரு மைல் நீளத்திற்கு வீதியின் இருபக்கங்களிலும், அகதிகளாலும், பொதுமக்களாலும் பனம் விதைகள் நாட்டி வைக்கப்பட்டன. அறவழிப் போராட்டக் குழுச்செயலாளர் திரு ஏ. ஜீவகதாஸ் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் இம்மாதம் 30 31ம் திகதிகளில் கைதடி அகதிகள் முகாமில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஆறுமைல் தூரத்திற்கு வீதியின் இருபக்கங்களிலும்அகதிகளால்4,000 பனம் விதைகள் நாட்டி வைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சூ)

## "சிறுவயதில் நல்ல பழக்க வழக்கங்களை வளர்க்கவேண்டும்!"

(மாவிட்டபுரம்)

"கல்வி நிலை மேம்படவேண்டுமானல் ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சியில் நாம் அதிக அக்கறை காட்ட வேண்டும். சிறுவயதில் நல்ல பழக்க வழக்கங்களை வளர்ப்பதன் மூலமே மாணவர்கள் கல்வி நிலையில் உயர முடியும்."

இவ்வாறு தெல்லிப்பழை தந்தை செல்வா ஆரம்ப ப்பாடசாலையின் பரிசளிப்பு விழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சமயம் அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளை கூறினர்.

பாடசாலை அதிபர் திரு. க சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்: "வடமாநிலத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளின் வளர்ச்சியில் நான் அதிக அக்கறை கொண்டுள்ளேன். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் முடிந்த அளவில் உதவிசெய்து வருகிறேன். பாடசாலைகளில் கட்டிட வசதிகளை அதிகரிக்க எம்.பீக்களின் சிபார்சுடன்பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனல் இன்று இது விடயத்தில் இக்கட்டானதோர் நிலை ஏற்பட்டுள்ளது. எம். பீக்கள் இல்லாதுவிட்டால் கல்விப்பணிப்பாளர்களின் சிபார்சே பெறப்படலாம் என நம்புகிறேம் என்றர்.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரமும் பேசினர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி. சிவானந்தம் பரிசில்களை வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டியில் நேற்று முன்தினம் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்து யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியோரத்தில் கதைத்துக்கொண்டிருந்த மயிலிட்டியைச்சேர்ந்த எஸ் காசிப்பிள்ளை இவ்விபத்தில் காயமடைந்தார்

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மூளாயைச்சேர்ந்த வி. பாக்கியநதரும் காயமடைந்தாரி. இருவரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(க)

## மணிவாக்கு

''அமைதியானது மனிதர்களின் மனங்களில்தான் வாழ்கின்றது. மகாநாட்டு மேசைகளிலும், கையெழுத்துக்களிலுமல்ல. உண்மையான நட்பு ஒருபோதும் அழிவதில்லை. எவ்வளவுக்கு அது சோதனைக்குள்ளாகிறதோ அவ்வளவுக்கு அது பலமடைகிறது''.

—றிச்சாட் நிட்டிரிஸ்

## நமது நோக்கு

# திரு. பார்த்தசாரதியின் 2-வது வருகை

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியின் விசேஷ பிரதிநிதி திரு கோபாலஸ்வாமி பார்த்தசாரதி இலங்கைத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக மீண்டும் இலங்கை வந்துள்ளார்.

நாட்டில் இனக் கலவரங்கள் வெடித்து என்றுமில்லாதவாறு அழிவுகளையும் அனர்த்தங்களையும் விளைவித்துவிட்ட சூழ்நிலையில்- அந்த நெருப்புப் புகைந்து கொண்டிருந்தவேளையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதிப் பகுதியில் அவர் தமது முதலாவது பயணத்தை மேற்கொண்டார். ஏறத்தாழ ஆறு நாட்கள் இங்கு தங்கி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் அரசாங்க, எதிர்க்கட்சித் தலைவர்களோடு ஆலோசனைகள் நடத்திவிட்டு நாடு திரும்பினார்.

திரு.பார்த்தசாரதியின் அன்றைய வருகைக்கும் இன்றைய வருகைக்கும் இடையில் இரண்டு மாதங்கள் கழிந்து விட்டபோதிலும் - சூடு இன்னமும் சரியாகத் தணியாதவிடத்தும்- தேசிய, சர்வதேசிய மட்டத்தில் இந்நாட்டுத் தமிழர் பிரச்னை தொடர்பாகப் பல்வேறு வகையில் கருத்துப் பரிமாறல்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் இப்பிரச்னையில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரும் இதுபற்றி விரிவாகவும் ஆழமாகவும் சிந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவின் பிரதிநிதியாக அவரது சகோதரர் திரு. எச். டயிள்யூ ஜெயவர்த்தன தென்கிழக்காசிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு அந்நாட்டுத் தலைவர்களுக்கு இங்கு ஏற்பட்ட நிலைமைகளை விளக்கிவிட்டுத் திரும்பினார். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற சமயம் பல நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து இப்பிரச்னையில் தங்கள் நிலைபற்றி எடுத்துக் கூறினார். வெளிநாட்டமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீது பொதுச்சபையிலேயே இலங்கை அரசாங்கத்தின் கொள்கையை விளக்கிப் பேசினார். மொரிஸியஸ் பிரதமர் அன்ருத்த ஜகநாத் இலங்கை வன்செயல்களைப் பற்றிப் பொதுச் சபையில் குறிப்பிட்டார். தமிழ்நாடு அமைச்சர் பன்ருட்டி ராமச்சந்திரன் ஐ. நா. மனித உரிமைகள் குழுவில் இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்த கதி பற்றி எடுத்தியம்பினார். இலங்கைப் பிரதிநிதி அதற்குப் பதிலளித்து விளக்கம் அளிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது.

தமிழ்நாடு தி. மு, கழகத்தினர் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்றினை ஐ. நா. பொதுச் செயலாளரிடம் ஒப்படைத்தனர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமிய தொழில் அமைச்சருமான திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் அமெரிக்கா சென்று திரும்பும் வழியில் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி மற்றும் மத்திய அரசுத் தலைவர்களையும், தமிழ் நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து உரையாடினார்.

இவ்வாறு சர்வதேச மட்டத்தில் இலங்கைத் தமிழர் நிலைமை அலசப்பட்ட அதே வேளையில் ஜனாதிபதி திரு ஜயவர்த்தன சகல கட்சிகளையும் அழைத்து வட்ட மேசை மகாநாடு ஒன்றை நடத்த முயற்சி எடுத்தார். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இம் மகாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படாமை பல வகையிலும் ஒரு குறைபாடாகவே உணரப்பட்டது இந்த அடிப்படையிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் மகாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிட்டது.

இலங்கை பௌத்த காங்கிரஸ், இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் சமயத் தலைவர்களையும் ஜனாதிபதி சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் திரு பார்த்தசாரதி மீண்டும் இங்கு நடத்தவிருக்கும் பேச்சுக்கள் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

கடந்த முறையைப் போலல்லாமல் சற்று நிதானமான சூழ்நிலையிலேயே பேச்சுக்கள் நடைபெறுகின்றன. ஜனாதிபதி திரு ஜயவர்த்தன அவர்கள் பொதுநல நாடுகளின் மகாநாட்டுக்காக புதுடில்லி செல்கையில் அங்கு இந்திய பிரதமருடன் நடத்தும் ஆலோசனைகளின் போது இன்று திரு பார்த்தசாரதிநடத்தும் பேச்சுக்களின் விளைவுகளை நாம் உணரக்கூடியதாக இருக்கும். அதன் பிறகே தீர்க்கமான முடிவுகள்ஏதும் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

எது எவ்வாறுயினும் இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்திய அரசு ஒரு சிரேஷ்ட இராஜதந்திரியை ஏற்பாடு செய்து உதவியிருப்பதும், அதனை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுவதும் வரவேற்கத்தக்கது.

இந்த இனப் பிரச்னை நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டு சகல மக்களும்ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்து நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலை உருவாக இது பயன்பட வேண்டும் என்பதே நமது விருப்பம்.

# ஸ்கந்தஷஷ்டி விரதத்தின் மகிமை

கலியுக வரதனாகிய கந்தப் பெருமானுடைய விரதங்களுள் மிகவும் சிறந்தது ஸ்கந்த ஷஷ்டியாகும். இந்த விரதமானது ஐப்பசி மாதத்து வளர்பிறை முதல் ஷஷ்டிவரை ஆறுநாட்களும்ஆறுமுகப்பெருமானை நினைந்து வழிப்பட்டு அருள்பெறுவதற்குசிறந்தபெருநாட்களாகும்.

ஆயிரத்தெட்டு (1008) அண்டங்களிலும் அநீதி தலைதூக்க நீதிமறைய கொடுங்கோல் ஆட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவாகிய 'சூரனையும்' கன்மத்தின் வடிவாகிய 'சிங்கனையும்', மாயாமாலத்தின் வடிவாகிய 'தாரனையும், சூர, சிங்க, தாரகன் என்று சொல்லும்படியான அசுசுரசக்திகளை எல்லாம் கலியுகவரதன் அழித்து, அமர சக்தியை நிலைநாட்டிய திருநாளே ஸ்தந்த ஷஷ்டியாகும்.

இந்த ஆறுநாட்களும்முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களிலெல்லாம் விசேட அபிஷேக ஆராதனைகளும், 'ஷண்முகார்ச்சனை' கந்த புராணபடனம் படிப்பு ஆகியனவும் சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம். இந்தப் புனிதத்திருநாட்களில் ஆண்களும், பெண்களும், கன்னிப் அதிகாலையில் எழுந்து ஸ்நானம்செய்து ஆசாரசீலராய் ஆலயம்சென்று சங்கற்பஞ்செய்து காப்புக் கட்டி விரதத்தை ஆரம்பித்து கந்தனின் திருநாமங்களை இடைவிடாது ஜெபம்செய்து வழிபடுபவார்கள் இதனால் இகபரசுகத்தையும்பேரின்பப்பெருவாழ்வையும் பெறுவார்கள்.

குழந்தைச் செல்வமில்லாத சுமங்கலிப் பெண்கள் ஸ்கந்த ஷஷ்டி விரதமிருந்து முருகன் அருளால் அச்செல்வத்தைப் பெற்றுள்ளார்கள். இன்றும் அந்தக்கோட்பாடு கையாளப் பட்டுவருகிறது.

'சட்டியிலே இருந்தால் அகப்பையிலே வரும்' என்பது போல (ஸ்கந்த) ஷட்டியிலே விரதம் இருந்தால் கருப்பையில் (குழந்தை) வரும். இது முன்னோர்கள் வாக்கு. எனவே தான் கணவனும் மனைவியுமாக இந்த விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

வைாகும்.

சூரபத்மன், ஸிம்ஹமுகன், அதிசூரன் பானுகோபன் முதலிய அசுரர்கள் மிகவும் பராக்கிரமம் வாய்ந்தவர்கள். எவராலும் அவர்களை வெல்ல முடியாது. தேவர்களெல்லாம் அசுரர்களுக்கு அடிமைப்பட்டவர்கள். வேதாந்த கோட்பாட்டின்படி அஹங்காரம், காமம், குரோதம் முதலிய அடாத அந்தக்கரண விருத்திகளை அசுரர்கள் என்று உருவகப் படுத்தி இயம்பப்படுகின்றன. அஹங்காரத்தினின்றும் ஆசாபாசத்தினின்றும் மனதில் எழும் எண்ணிறைந்த புல்லிய எண்ணங்களே அசுரப் படைகள்.

தேகம் எடுத்துள்ள யார் தான் அவைகளுக்கு அடிமையாகிறதில்லை. ஆனால் அவைகளை அடக்கி அழிப்பதேவாழ்க்கையின் குறிக்கோள். அம்மை

### சிவஸ்ரீ சாம்பசிவசரவணபவ குருக்கள்

கன்னிப்பெண்களோ தாம் நல்ல குணமுடைய கணவனை அடைய வேண்டுமென்றும்- நல்ல வாழ்வு வாழவேண்டுமென்றும், பெரியவர்களும், வறியவர்களும் தமக்கு வந்த வினைதீரவேண்டுமென்றும் கந்தனை வணங்கி விரதமனுஷ்டிப்பார்கள்,

கார்த்திகைவிரதம், வெள்ளிக்கிழமை விரதம், தைப்பூச விரதம், என்பனவும் முருகனுடைய விரதங்களாகும். ஸ்கந்த ஷஷ்டிவிரதம் தொடர்ந்து ஆறுவருடங்களும், கார்த்திகை விரதம் பன்னிரண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்றுவருடங்களும் அனுஷ்டிப்பார்கள்.

ஜீவர்களுள் மனிதனாகப் பிறந்தவனிடத்து உள்ள மகிமைகளெல்லாம் உருவெடுத்தவன் முருகன். முருகன் என்றால் அழகன் என்றும் பொருள்படும். அதனால்தான் அழகன், குமரன், சரவணபவன் வடிவேலன், என்றெல்லாம் கந்தனை அன்பர்கள் அன்புடன் அழைப்பார்கள்.

முருகனுக்கு மண்ணுலகில் சிறப்பாக ஆறுபடை வீடுகள் இருக்கின்றன அவை திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, பழனி, சுவாமிமலை, திருத்தணி என்ப

யப்பன் அருளால் அவதரித்த கந்தவேள் அசுரர் கூட்டத்தை வேரொடு அறுப்பதற்கென்றே முற்பட்டு பெரும்போர்புரிந்து அசுரசக்திகளை அழித்தார்.

எனவே அசுரசக்திகளை அழித்து அமரசக்தியை நிலைநாட்டிய திருநாளாகிய ஸ்கந்த ஷஷ்டிப் பெருநாட்களில் நாமும் பக்தி சிரத்தையுடன் விரத மனுஷ்டித்து கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், ஸ்கந்த ஷஷ்டிகவசம் முதலிய பாடல்களைப்பாடி எமது வினைகள் தீர ஆறுமுகனை வணங்கி அவன் அருள்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

### ஸ்கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்)

இன்று வண்ணை - ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனாபிஷேகமும் பூஜையும் தொடர்ந்து திருச்செந்தூர் புராணபடனமும் மாலை சந்தனக் காப்புச் சாத்தப்பெற்ற செந்தில் கதிர்வேலவனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும் வசந்தமண்டப பூஜையும் பெருமான் உள்வீதி வலம்வருதலும் நடைபெறும்.

## மக்கள் கருத்து

### சிறுவர் விழாவும் மேடைப்பேச்சும்

29-10-83 சனிக்கிழமை உருத்திரபுரம் காந்தி இல்லத்தில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் கலந்துகொண்ட பெரியோர்கள் மத்தியில் இடம் பெற்ற ஒரு பண்பற்ற பேச்சு உருத்திரபுரத்தில் உள்ள பெரும்பான்மை மக்களின் உள்ளத்தைப் புண்படுத்தியுள்ளதை நான் உணரக் கூடியதாக உள்ளது.

தெய்வாதீனமாகக்குருகுலத்தைச் சேர்ந்த ''அப்பு''வும் வேறுசிலரினதும் வேண்டுகோளுக்குச் செவிமடுத்த இளைஞர்களும், பொதுமக்களும் அமைதியை நிலைநாட்டினர். இல்லையேல் நிலைமை மோசமடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மேடைப்பேச்சில் பங்கு கொள்பவர். எந்த விழாவில் பங்குபற்றுகிறோம், எந்த நிலையில்உள்ளசிறுவர் விழாவில் பேசுகிறோம் என்பதை மறந்து பேசியது ஓர் பெருந் தவறாகும். இதைவிட ஓர் கிறிஸ்தவ சகோதரியின் உள்ளத்தை வேதனைக்குள்ளாக்கும் வகையில் சொற்பிரயோகம் செய்தமைஅதைவிடக்குற்றமாகும்.

இன்றைய எமது நிலையில் மதம், இனம் என்ற பாகுபாடு காட்டாது ஒரே குடும்பம் போல் வாழக்கற்றுக்கொள்ள வேண்டிய வருங்காலச்சிறுவருக்கு மதபோதை ஊட்டி மக்களைப் பிளவுபடுத்துவது அநாகரிகமான செயல். மதம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் ஒருமதிலாக அமைந்து விடக்கூடாது.

அச்சந்தர்ப்பத்தில் பொறுமையைக் கடைப்பிடித்த அக்கிறிஸ்தவ சகோதரியை சைவர் மட்டிலல்லாது தமிழ் மக்கள் சார்பிலும் நாம் மதிப்புக் கொடுத்து வைக்கவேண்டியவர்களாக உள்ளோம் என்பதை மனப்பூர்வமாகத் தெரிவிக்கின்றேன்.

'அநாதை'

## சண்முக தோத்திரம்

சேவலங் கொடியாய் போற்றி
சேனையர் விளக்காய் போற்றி
மேவருங் குணத்தாய் போற்றி
மேலவர் மனத்தாய் போற்றி
தேவருங் கனியாய் போற்றி
தேனினு மினியாய் போற்றி
தாவருங் கழலாய் போற்றி
சண்முகா போற்றி போற்றி.

ஐங்கரற் கிளையாய் போற்றி
ஆறிரு யுயத்தாய் போற்றி
பங்கயத் துதித்தாய் போற்றி
பகலவர்க் கொளியாய் போற்றி
மங்கள முகத்தாய் போற்றி
மாசறு மணியாய் போற்றி
சங்கரன் சுதனே போற்றி
சண்முகா போற்றி போற்றி.

பொங்கனற் பொலிந்தாய் போற்றி
பொங்கிருள் களைவாய் போற்றி
திங்களிற் குளிர்வாய் போற்றி
தீபமா யொளிர்வாய் போற்றி
எங்கணும் விழியாய் போற்றி
ஏதிலார்க் கெளியாய் போற்றி
சங்கமுகத் தமிழாய் போற்றி
சண்முகா போற்றி போற்றி.

குருபரா குழகா போற்றி
குன்றமர் குமரா போற்றி
திருவருட் டெளிவே போற்றி
திகழிளந் திருவே போற்றி
இருநிலக் கிழவா போற்றி
இகபர சுகமே போற்றி
தருநிழற் கதிரே போற்றி
சண்முகா போற்றி போற்றி.

— ச. தங்கமாமயிலோன்

# "படித்த இளம் பெண்கள் வீணுக நேரத்தை போக்கக்கூடாது!"

## உதவித் தொழில் ஆணையாளர் கூறுகிறார்

(பண்டத்தரிப்பு)

''வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்திருக்கும் இக்கால கட்டத்தில் வீட்டிலிருக்கும் படித்த இளம்பெண்கள் ஒய்வு நேரத்தை வீணாக்காது தையல் பயிற்சி, பன்னவேலைப் பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட்டு தங்கள் குடும்பப் பொருளாதாரத்தை முன்னேற்றவேண்டும்.''

இவ்வாறு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க தையல் பயிற்சி நிலையத்தினரின் உற்பத்திக் கண்காட்சித் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். உதவித் தொழில் ஆணையாளர் திரு. என். தியாகராசா குறிப்பிட்டார். திருமதி நாகராணி தியாகராசா கண்காட்சியை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். திரு. தியாகராசா தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்துகையில், எமது தொழில் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் தையல் பயிற்சி மேசன் வேலைப்பயிற்சி தச்சு வேலைப் பயிற்சி போன்ற பல தொழிற் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. யுவதிகளும், இளைஞர்களும் இப்பயிற்சிகளைத் தவறாது நல்லமுறையில் பயன்படுத்துவதன் மூலம் தமது எதிர்காலத்தை பிரகாசமுள்ளதாக ஆக்கிக்கொள்ளமுடியும். இங்குள்ள தையல் பயிற்சி நிலையத்தினரின் உற்பத்திப்பொருட்கள் மிகவும் தரம்வாய்ந்தனவாகவும், சிறந்தனவாகவும் இருப்பதைநன்கு அவதானித்தேன். தையல் பயிற்சி ஆசிரியை செல்வி நவரத்தினத்தின் சேவையையும் பாராட்டாமல் இருக்க முடியாது''என்றார். கிராம அபிவிருத்திச்சங்க உப தலைவர் திரு எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் வட்டுக்கோட்டைத் தொகுதி தொழில்உத்தியோகத்தர். திரு எஸ்.சுப்பிரமணியமும் உரையாற்றினார். செல்வி . புஷ்பராணி நன்றியுரை நிகழ்த்தினார்.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

ஆனையிறவு அரசினர் மருந்துக்கலவையாளராக கடமையாற்றிய திரு. எஸ். தனபாலசிங்கம் இம்மாதம் தொடக்கம் காங்கேசன்துறை அரசினர் மருந்துச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு வட்டக்கச்சி அரசினர் மருந்தகமருந்து கலவையாளர் திரு. கே. வைகுந்தநாதன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## "சமூகசேவைக்கு இங்கு உரிய அந்தஸ்து இல்லை!"

(சாவகச்சேரி)

''வெளிநாடுகளில் சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களை அங்கு வாழ்கின்ற மக்களும் இயக்கங்களும் உரிய முறையில் கௌரவித்து, அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். ஆனால் எம்மவர்கள் மத்தியிலே சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு உரிய அந்தஸ்துகள் வழங்கப்படாமை மிகவும் வேதனைக்குரியதாகும். இந்த நிலை மாற்றப்படவேண்டியதாகும்.''

இவ்வாறு கிராம அபிவிருத்தி அதிகாரியும் கைதடி அகதிகள் முகாமின் இணைப்பதிகாரியுமான திரு. பி. ஜே. அருள்நாயகம், கைதடி அகதிகள் முகாமில் பணிபுரிகின்ற அறவழிப் போராட்டக்குழுத் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

குழு இயக்குனர் திரு. வீ. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தின்போது கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இன்று வரை தொடர்ந்தும் அகதிகள் ஆதரவுப்பணியில் ஈடுபட்டுழைத்து வருகின்ற தொண்டர்களுக்கு, குழுவினர் சார்பில் தீபாவளி அன்பளிப்பாக பார்சல்களை இயக்கத்தின் செயலாளர் திரு.க.ஜீவகதாஸ் வழங்கினார்.

## மீண்டும் இயங்குகிறது

(பண்டத்தரிப்பு)

கொள்ளைச்சம்பவம் காரணமாக கடந்த மூன்று மாதகாலமாக மூடப்பட்டிருந்த சித்தன்கேணி உபதபால் நிலையம் மீண்டும் கடந்த வாரம் தொடக்கம் திறக்கப்பட்டு இயங்கிவருகின்றது. இந்த உபதபால் நிலையத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சித்தன்கேணி கிராம அபிவிருத்திச்சங்கம் விழிப்புக்குழுவொன்றையும் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.


# விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன், கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள் "பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

## "சேர்கோப்பூர்"

450 மி. லீ.—55 ரூபா. 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"

450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) "ஹெடோனல் எம். 40%"

450 மி. லீ.— 35 ரூபா

(3) "ஹெடோனல் D. 55%"

250 மி. லீ.—55 ரூபா.

## ஹைகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.

தொலைபேசி : 93563.


# பருத்தித்துறை-புலோலி தெங்குசங்கம் ரூ.29 ஆயிரம் அகதிகளுக்கு நிதிசேகரித்து வழங்கினர்!

(புலோலி)

பருத்தித்துறை - புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்திவிற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தனது 14 கிளைகளிலிருந்தும் 29624.80 சதத்தை அகதிகள் புனர்வாழ்வுநிதியாக சேகரித்துள்ளது.

இவ் அகதிகள் புனர்வாழ்வு நிதியில் 3000 ரூபாவையும், 1125 ரூபா பெறுமதியான உடுபுடவைகளையும்பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுக்குழுத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகுவிடம் சங்கம் கையளித்தது மீதியான 25499 80சதத்தையும் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் (பனம் பொருள்) ஊடாக அகதிகள் புனர்வாழ்வு பொதுநிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகச் சங்க இயக்குநர் சபைத் தலைவர்திரு. கே. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

## "எதிர்காலத்துக்கு ஆரம்ப கல்வியே அத்திபாரம்!" —யாழ். கல்விப்பணிப்பாளர்

(கரவெட்டி)

''ஒரு நாட்டின் கல்விக்கு மிக முக்கியமானது ஆரம்பக் கல்வியாகும். சிறுவர்கள் மத்தியில் புகட்டப்படும் கல்வியும் அதைப் புகுத்தும் முறையும் மிக முக்கியமானது. இதில் எமது பகுதி ஆசிரியர்களின் பணி பாராட்டத்தக்க தாகும்''.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கோப்பாய், உடுப்பிட்டி கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நான்கு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா தலைமை தாங்கினார்.

இக்கருத்தரங்கிற்கு சமூகமளித்த ஒவ்வொரு ஆசிரியரினதும் பிரச்னைகளை திரு. சிமியாம்பிள்ளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யத் தாம் தக்கநடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

## "மருந்துக்கலவையாளருக்கு சிங்களமொழித்தேர்ச்சி: விதிவிலக்குவேண்டும்!"

(பண்டத்தரிப்பு)

''மருந்துக்கலவையாளருக்கு விதிக்கப்பட்டிருக்கும் எட்டாம் வகுப்பு சிங்கள மொழித் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்படவேண்டும். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றிவரும் இவர்களின் தரத்திலும் பார்க்க அதி உயர்ந்த தரத்திலுள்ளவர்களுக்கு மூன்றும் வகுப்பு சிங்களத் தேர்ச்சி விதிக்கப்பட்டிருக்கையில் இவர்களுக்கு 8ம் வகுப்பு சிங்களத் தேர்ச்சி விதித்திருப்பது அநீதியானது''

இவ்வாறு சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்று அரசாங்க மருந்து கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் 13ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிளைத் தலைவர் திரு இ. வைரமுத்து தலைமையில் யாழ்ப்பாண நகரில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மருந்து கலவையாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சீருடை தரமற்றதாக இருப்பதால் நல்லதரமுள்ள பொலியெஸ்டர் துணியில் சீருடை வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி, திருநாவுக்கரசு (குருநகர் அரசினர் மருந்தகம்), உபதலைவர்: திரு இ. செல்வராசா (புத்தூர் அரசினர் மருந்தகம்), செயலாளர்: திரு என். எம். கந்தசாமி (பண்டத்தரிப்பு கிராம வைத்தியசாலை), உப செயலாளர்: திரு எஸ். தனபாலன் (புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை) பொருளாளர்: திரு கே, நடராசசிங்கம் (சுன்னாகம் அரசினர் மருந்தகம்)

செயற்குழு உறுப்பினராக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கணவர் பொலிஸில் புகார்

(பண்டத்தரிப்பு)

மூன்று பிள்ளைகளுக்குத் தாயாரானதமது இளம் மனைவி அயல் வீட்டு இளைஞன் ஒருவருடன் தலைமறைவாகிவிட்டதாகவும், இவர் தன்னுடன் தாலிக்கொடி உட்பட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க நகைகளையும் எடுத்துச் சென்றுவிட்டார் என்றும், இவரைதேடிக் கண்டு பிடித்துத் தருமாறும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தொல்புரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். வெளிநாட்டில் உயர்பதவியிலிருந்த சமயம் பார்த்து தமது மனைவி தமது கடைசிப் பிள்ளையான குழந்தையுடன் இவ்வாறு சென்றுவிட்டதாகவும் அவர் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். பொலிசார் இதுபற்றி விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## போட்டியின்றி தெரிவு

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தும்பளைக் கிளையின் கிளைக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

கடந்த 29-ம் திகதி இக்கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள்; எஸ். காராளசிங்கம், வி.பி.சற்குணராஜா, கே எஸ். நடராஜா, எஸ். சந்திரசேகரம், என். கந்தசாமி, கே. சந்திரசேகரம், வி. இராசரத்தினம், எஸ். சுந்தரலிங்கம், எம். குலசேகரம் ஆகிய ஒன்பது பேரும் இக்கிளையின் கிளைக்குழு உறுப்பினர்களாகப் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பன்குளம் கொலை வழக்கில்:

# எதிரிகள் விடுதலை!

(திருகோணமலை)

பன்குளம் கொலைவழக்கில் சாட்சி முரண்பாடு காரணமாக இரண்டு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

இக்கொலைச் சம்பவம் ஜூன் கடைசிவாரத்தில் நடந்தது.

இவ்வழக்கில் 25-7-83 இல் எஸ் பி. தங்கராசா என்பவரை வெட்டிக்கொலைசெய்ததாக காமினி, சுனில் ஆகிய இரண்டு எதிரிகள்மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

வழக்கு, திருமலை மாவட்ட நீதிபதியும் மேலதிக நீதவானுமான திரு. ஜோர்ஜ் பெரேரா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இறந்தவரின் மகனை செல்வரத்தினம் சாட்சியளித்தார்.

அவர் சொன்னதாவது; சம்பவதினம் இரவு எட்டு மணியளவில் ஒரு கோஷ்டி வீடுகளுக்கு நெருப்பு வைத்துக் கொண்டுவந்தது. உடனே நான் வீட்டுத் தளபாடங்களை நெருப்புக்கு இரையாகாமல் காப்பாற்ற அவற்றை முற்றத்தில் போட்டேன். பின்னர் கண் பார்வை இல்லாத எனது அம்மாவைத் தூக்கிக்கொண்டு போய் ஓர் பாதுகாப்பான இடத்தில் வைத்தேன். அச்சமயம் அம்மா, அப்பாவைப் போய்பார் என்று என்னைக் கோரினார்.

அச்சமயம் இறந்தவரான எனது தந்தை நாம் இருக்கும் பக்கமாக ஓடி வருவதைக் கண்டேன். நான்குபேர் அவரை துரத்திக் கொண்டு வந்தனர். அப்பொழுது எனது தந்தை ஒரு கட்டையில் தடக்கிக் கீழே விழுந்துவிட்டார். உடனே 'வெட்டு, கொத்து' என்ற சத்தம் கேட்டது. இறந்தவரை, துரத்திக்கொண்டு வந்தவர்கள் இரண்டு, மூன்று தரம்வெட்டினார்கள். இரண்டு எதிரிகளும் தான் இறந்தவரை வெட்டினர். அவர்களின் கைகளில் தான் ஆயுதங்கள் காணப்பட்டன,''

இக்கட்டத்தில் இரண்டு எதிரிகளில்யார் இறந்தவரை வெட்டியது, யார் கொத்தியது என்ற விஷயம் குறித்து சாட்சி முரண்பாடாகச் சாட்சியமளிக்கவே, இவ்வழகை மேற்கொண்டு விசாரிப்பதில் எதுவித பயனுமில்லை என்றுகூறி நீதவான் எதிரிகளை விடுதலை செய்துதீர்ப்பளித்தார்.

## வட்டக்கச்சியில் சாரணர் வாரம்

(கரவெட்டி)

வட்டக்கச்சி சாரணர் மாவட்ட சாரணர் வாரம் அண்மையில் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கடந்த மாதம் 25ம் திகதி தொடங்கப்பட்ட இவ் வைபவத்தின் போது 28ந் திகதி சாரணர் வேலைவாரம் வட்டக்கச்சி மாவட்ட சாரண ஆணையாளர் திரு கே.கோபாலகிருஷ்ணன் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

இதன்போது நடைபெற்ற சிரமதானப்பணியில் வட்டக்கச்சி அரச மருத்துவ மனை, வட்டக்கச்சி சேமக்காலை என்பன துப்பரவு செய்யப்பட்டன.

29ம் திகதி நடைபெற்ற ''சாரணர் பாசறை'' வைபவத்திற்கு யாழ். சாரணர் வெளிக்கள ஆணையாளர் திரு பொ சிறீஸ்கந்தராசா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்.

மகாவித்தியாலய அதிபர் திரு பொன்.சபாபதி, சாரணர் தலைவர் திரு வி.புவனேந்திரன் ஆகியோர் முன்னின்று நடாத்திய இவ்வைபவத்தில் கிளிநொச்சி கல்வி வட்டாரத்தைச்சேர்ந்த ஆறுபாடசாலை களிலிருந்து சுமார் அறுபது சாரணர்கள் கலந்து கொண்டனர்.

## இன்றைய பலன்

ஐப்பசி 22-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(8-11-83)

மேடம்: தொடங்கிய விடயம் பாதியில் தடைப்படும் இதனுல் பொருள் விரயமாகும் குடும்பத்தில் பூமிப்பிணக்கு ஏற்படும் அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கவனம் செலுத்தவும்.

இடபம்: வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும் காதல் வட்டாரங்களில் கலகலப்புதென்படும் இல்லத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும்நாடகக் கலைஞர்களுக்கு வெற்றித்தினம்.

மிதுனம்: தாமதகுணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண் பெயருக்கு இடமுண்டு குடும்பத்தில் உள்ள ஒருவரின் உடல்நலம் பாதிப்படையும்.

கடகம்: அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்டதேவதையின் பார்வையும் பதியலாம் தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும் குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமையும்.

சிங்கம்: முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும் இனபந்துக்களுடன் தொடர்புகள் பெருகும் பரம்பொருளின் அருளும் உண்டு பம்பரம்போல் சுழன்று பணியாற்றுவீர் பாராட்டுதலும் உண்டு.

கன்னி: பொதுப்பணிகளில் ஈடுபட விரும்புவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்கு புதிய ஆர்வம் பிறக்கும் சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரையை மேற்கொள்வதற்கும் இடமுண்டு.

துலாம்: சீறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும் தானிய நஷ்டத்துக்கும் இடமுண்டு அடக்கத்துடன் பெண்கள் நடந்துகொள்ளவும் செலவினங்களை கட்டுப்படுத்தும் தன்மை வேண்டும்.

விருச்சிகம்: குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள் சிறிய விடயத்துக்குக்கூட மற்றவர்களிடம் குறைகேட்க நேரிடும் வாதரோகத்துக்கு இடமளியாதுசுகாதாரம்வேண்டும்.

தனு: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள் எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம் இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும் சிலருக்கு பொதுசனத்தலைமையும் கிடைக்கும்.

மகரம்: திரைமறைவில்சதித் திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவார்கள் கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும் சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

கும்பம்: மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் மாதுரு வழியால் தனவரவுக்கும் இடமுண்டு வாகனச் சாரதிகள் அதிக பயனடைவர் டாக்டர்கள் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும்.

மீனம்: இணைந்திருக்கும் இதயங்கள் இன்பத்தில் மிதக்கும் பிரிந்தவர்கள் வாழ்வில் மீண்டும் இணைவார்கள் வேற்றுமை மறைந்து ஒற்றுமை நிலவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


யாழ். மக்களுக்கோர்

மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்

(பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகளுக்கும்

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA
PHONE: 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 10,000/– ஒரு வழி பயணச்சீட்டு.

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?

சகல படிவங்களை,

1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3. சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?

Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-

1. Minolta PPC Photo Copier Model EP 300 — 78,690-00
2. Minolta PPC Photo Copier Model 300 RE — 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்) படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக் கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்


## மானிப்பாய் ப.நோ. கூ. ச.

# "23 பேர் வெளிநடப்பு செய்தார்கள் என்பது தவறு"

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க விசேட பொதுக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளினுல் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரு இயக்குனர்களாகிய திரு. செ. செல்வநாயகமும், திரு. எம். லோறன்சும் உறுதிப்படுத்தப்பட்டனர். இக் கூட்டத்தில் 23 பேர் வெளிநடப்பு செய்தார்கள் என்பது தவறுன கூற்றுகும்.

மானிப்பாய் ப நோ.கூ.சங்க தலைவர் திரு. சு. தர்மசீலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

''மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் 23 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர் என்று 3-ம் திகதிய ''ஈழநாட்டில்'' வெளியான செய்தி தொடர்பாக சில உண்மைகளை வெளியிடவேண்டியுள்ளது. சங்கத் தலைவர் திரு. சு. தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டுறவு திணைக்களத்தைச்சேர்ந்த திரு சிவசுப்பிரமணியம், திரு டி. தனபாலசிங்கம், திரு. எம். ஐ. சுலைமான், திரு. பி. கந்தையா திரு. க. நல்லைநாதன் ஆகியோரும், 70 பொதுச்சபை பிரதிநிதிகளும் சமூகமாய் இருந்தனர். எதிர்வாக்குகள் இன்றி பெரும்பான்மை பொதுச்சபையினரின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு இயக்குனர்கள் உறுதிப்படுத்தப்பட்டார்கள்.

''சங்கம் வாடகைக்கு விடகூடாரம் வாங்கிவிட வேண்டும் என்பதற்கும், பவுசர் கொள்வனவு செய்வதற்கும் அங்கீகாரம் கிடைத்ததோடு, 1984-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும், உச்சக்கடன் எல்லையும் அங்கீகரிக்கப்பட்டது. கலவரங்கள் நடைபெற்ற காலங்களில் சங்க இயக்குனர்களும், பொது முகாமையாளரும் சகல பணியாளர்களும் மிகவும் சிறந்த முறையில் செயலாற்றி பொது மக்களை கஷ்டமின்றி, பொருட்களை கட்டுப்பாடின்றி பெற்றுக் கொள்ளச்செய்தமைக்கு நன்றி தெரிவித்து தீர்மானமும் பொதுச்சபையினரால் நிறைவேற்றப்பட்டது. மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வீரசிங்கம் ஞாபகார்த்த கட்டிடத்தில் மலசலகூடம் அமைத்தலுக்கு ரூபா 4800/- கொடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (க)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சி
6-02 'லஸி' நாயொன்றின் தீரச்செயல்கள் (ஆங்கிலம்)
6-3' 'கலை அரங்கம்'
7-00 செய்திகள் (தமிழ்)
7-15 விளையாட்டுப்பயிற்சி
7-30 மரம் நடுகை பற்றிய பிரசார நிகழ்ச்சி)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 குறுந் திரைப்படம்
9-00 பேட்டி நிகழ்ச்சி (சிங்களம்)
9-15 விளம்பர நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ஹவாய் 5 ஓ' துப்பறியும் தொடர் சித்திரம் (ஆங்கிலம்)
10-40 நிகழ்ச்சிகள் முடிவு

## யாருடையது?

றூபி போட்டோவில் கடமையாற்றும் திரு. தி. சிறிதரன் என்பவரால் குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கு முன்பாக கண்டெடுக்கப்பட்ட மணிபர்ஸ் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி,ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்... யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக காண்பிக்கப்படும்.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**
(புதிய பிரதி)

**வின்ஸர்** [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
**சாரதா**
10-11-83 முதல்
எம் ஜி ஆர் - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர், ஜெயலலிதா சோ, மனோரமா, தேங்காய், அசோகன் நடித்த
**"எங்கள் தங்கம்"**
(ஈஸ்ட்மன் கலர்)
எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு கடைசிச் சந்தர்ப்பம்

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — K. R. விஜயா மாதவி, சுருளிராஜன் ஸ்ரீபிரியா மற்றும் பலர் திறம்பட நடித்த வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்) தினசரி
10-30, 2-00, 4-30, 7-00
36th
CHAMBER
of SHAOLINE

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
"IT COULD HAPPEN TO YOU"
A film on V. D.
(Strictly for Adults)
This film deals with Sexually Transmitted diseases. Patrons are advised that it contains scenes and subject matter which may be unsuitable for certain sensitive members of the public.
EVERY TEENAGER above 18 years must not miss this film.
Next:
CLASH OF THE PITANS
25ந் திகதி முதல்
**மூன்றாம் பிறை**

# வடமாகாண உதைபந்தாட்டவீரர்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

''வடமாகாண உதைபந்தாட்ட வீரர்களின் தரம் மிகவும் பழைமை வாய்ந்தது. இந்த நிலையைமாற்றி, வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் ஒரேவிதமான, புதுமையான முறையில் உதைபந்தாட்டத்தின் தரத்தை உயர்த்த நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து கடுமையாக உழைக்க வேண்டும்''

இவ்வாறு இலங்கை உதைபந்தாட்டக் கட்டுப்பாட்டுச் சபையின் வடபிராந்தியக் கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் வைத்திய கலாநிதி ஜே. பி. ஸி. பிலிப் கூறினர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம, பருத்தித்துறை, கிளிநொச்சி, வவனியா, மன்னர், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள உதைபந்தாட்ட லீக்குகளிலிருந்து கூடுதலான பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணஉதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு ஈ கே. குமரையா பேசுகையில்: வடமாகாணத்தின் உதைபந்தாட்டத் தரம் உயரவேண்டுமானல்; எமக்கென நாம் ஒரு புதிய சட்டதிட்டங்களை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்வதனல் வருங்காலத்தில் எமது உதைபந்தாட்டத்தின் தரத்தையும் அதன் நிர்வாகத்தையும் சிறப்பாகவும், ஒற்றுமையாகவும் செய்யமுடியும். புதிய சட்டதிட்டங்களை நாம் உருவாக்கும்போது. எமது தாய் சங்கத்தின் அனுசரணையுடன் செயல்பட்டால், எமது உதைபந்தாட்டத்தின் தரம் உயர்வதற்கு மேலும் உறுதுணையாக இருக்கும் என்று கூறினர்.

இவரின் கூற்றை மன்னர் உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு எம். ஜீவரட்ணமும், வவனியாப் பிரதிநிதி திரு. ஏ. எஸ். குணரட்ணமும் ஆதரித்துப் பேசினர்கள். இப்பிரேரணையைச் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இக்கூட்டத்தின் முதற் கட்ட வேலையாக, மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களுக்கு ஒரு பயிற்சிமுகாமை எதிர்வரும் 25ம், 26ம், 27ம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதெனவும், இப்பயிற்சி முகாமுக்கு திருவாளர்கள்: எம். டி. தம்பிராசா, எம். ஜீவரட்ணம், ஏ. எஸ். குணரட்ணம் ஆகியோர் பொறுப்பாக இருப்பார்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உதைபந்தாட்ட ஒழுங்குகளை மேற்பார்வைசெய்வதற்கு வைத்திய கலாநிதி ஜே.பி. ஸி. பிலிப், திரு. வி. கே. ஆறுமுகம், திரு. ஈ. கே. குமரையா, திரு. எஸ். தாசீசியஸ் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

## பாடசாலைக்கு மின்சாரவசதி!

(ஊரெழு)

சுன்னகம் நாகேஸ்வரி வித்தியாசாலைக்கு மின்சாரஇணைப்பும், மின் இயந்திரம் மூலம் நீர்பெறும் வசதியும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் திரு க. செல்லையா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் தொழிலதிபர் திரு. க. கனகராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு மின்விநியோகத்தையும், நீர்வழங்கலையும்தொடக்கி வைத்தார்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலம் கடமையாற்றி ஊர்காவற்றுறைக்கு மாற்றம் பெற்றுச் சென்ற டாக்டர் ஆ. இராசநாயகம் இம்மாதம் கோண்டாவில் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

கோண்டாவிலில் கடமையாற்றிய டாக்டர் கனகசபை இளைப்பாறியதைத்தொடர்ந்து கோண்டாவிலில் கடமையேற்றுள்ள டாக்டர் இராசநாயகம் சிறந்த சமூகசேவையாளரென்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

## ப.நோ.கூ. சங்கக் கிளையில் திருட்டு

(ஊரெழு)

வலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊரெழு கிளையில் திருட்டு நடந்திருப்பதாக சுன்னகம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

திருட்டுப்போன பொருட்கள் பெருமளவு புடவைவகைகளாகும். இவற்றின் பெறுமதி சுமார் இருபதினயிரம் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. திருடர்கள் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கி மீண்டும் அதே வழியாகவே வெளியேறியிருப்பதாகத்தெரியவருகிறது. தீபாவளி பண்டிகைக்காக இங்கு பெருமளவில் புடவைவகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பொலிசார் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்துள்ளதுடன், இது தொடர்பாக புலன் விசாரணையிலும் ஈடுபட்டுள்ளனர்.

## குண்டசாலை மாணவர் கூடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை விவசாயக் கல்லூரி குண்டசாலை தமிழ் பிரிவு மாணவர்கள் இம்மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருநெல்வேலியில் கூடவுள்ளனர்.

மாணவர்களது எதிர்காலம் குறித்து ஆராயப்படவுள்ள கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் மன்னர், மட்டக்களப்பு, திருகோணமலை வவனியா, முல்லைத்திவு ஆகிய மாவட்டங்களிலிருந்தும்மாணவர்களை பிரசன்னமாக இருக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (கு)

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
மாலை 6-00 மணி மட்டும்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா நம்பியார், சோ நடிக்கும்
**என் அண்ணன்**
புதிய பிரதி ஈஸ்ட்மென்கலர்

Rajah Jaffna
Daily 10 30, 2.00, 4.30 and 7.00
This Film ran over 10 weeks in Colombo
Great opportunity to see. Do not miss this
Roy Scheder
Jaws II
(Color)

**சாந்தி** யாழ்நகர்
10-30, 2-15, 4-45, 7-00
Nigel Terry Helen Mirren
EXSALIBUR
sex - thrill - color
11 முதல்
**ஊரும் உறவும்**
(கலர்)

# மானி. இந்துக்கல்லூரியில் அதிசய ஓணன்!

(மானிப்பாய்)

ஒரு அடி நீளமான நாக்கும், சூழலுக்கேற்ப தனது நிறத்தை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் தன்மையுடையதுமான அதிசய ஓணன் ஒன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி உயிரியல் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

Chameleon என ஆங்கிலத்திலும், பேய் ஓணன் என தமிழிலும் அழைக்கப்படும். இந்த ஓணன் இலை குழைகளுக்கிடையே விடும்போது பச்சைநிறமாகவும், இருட்டறையில் விடும்போது கறுப்பு நிறமாகவும் மஞ்சள் பெட்டியில் விடும்போது மஞ்சள் நிறமாகவும், இன்னும் பல நிறங்களாகவும் மாறுகிறது.

இதனது வால் ஏனைய ஓணன்களைப்போன்று நீண்டு இருந்தாலும் கையைப் போன்று தடிகளைப் பற்றிப் பிடிக்கும் ஆற்றல் உடையது ஒரு கொப்பிலிருந்து மற்றொரு கொப்பிற்கு செல்லும்போது இவ்வாலை ஒரு கையாகப் பாவிக்கின்றது. இதனது கை, காலில் ஐந்து விரல்கள் காணப்பட்ட போதிலும் இரண்டு விரல்களுக்கு எதிராக மூன்று விரல்களிலிருந்து கிளைகளைப் பற்றிப் பிடிக்கிறது.

இரையைக் கண்டவுடன் சுமார் ஒரு அடி வரை நீளமுள்ளதும் ஒட்டிப்பிடிக்கும் தன்மையும் உடையதுமான நாக்கை சடுதியாக வெளியே நீட்டி உணவுப்பொருளை வாயினுள் எடுக்கின்றது. இதனது இரு கண்களும் ஒரே நேரத்தில் வெவ்வேறு திசையில் திரும்பிப் பார்க்கும் இயல்பினையுடையது.

இவ்விலங்கு இலங்கையின் வ மாகாணம், வடமத்திய மாகாணம், கீழ்மாகாணங்களிலே காணப்படுகின்றது. வடமாகாண காடுகள் விவசாயத்திற்காக அழிக்கப்படுவதனல் இவ்விலங்கு அழிந்து போகக்கூடிய சாத்தியங்கள் உண்டு என்று உயிரியல் ஆசிரியர் திரு. சுந்தரலிங்கம் தெரிவிக்கிறர்.

## ஜீ. ஜீ. பொன்னம்பலம் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் 83 வது பிறந்ததினம் தொடர்பான நிகழ்ச்சியொன்று மாலை 6 மணியளவில் அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தநிகழ்ச்சிக்கு திருவாளர் எஸ்.ஆர்.கனகநாயகம் தலைமை வகிப்பார்.

இந்து, கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட பூசை ஆராதனைகளும் காலையில் இடம் பெறும்.

## பெயர் மாற்றம்

கலாசாலை வீதி திருநெல்வேலி என்ற விலாசத்தைச் சேர்ந்த சபாபதி மருதையா என்பவராகிய நான் இன்று தொடக்கம் (8-11-83) எனது பெயரை சபாபதி மைதிலி என வழங்குவதுடன் சகல ஆவணங்களிலும் குறிப்பிடுகிறேன் என்பதை அரசாங்கத்துக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
சபாபதி மைதிலி
1-11-83
9754

## வெற்றிடங்கள்

வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலை வல்லை-உடுப்பிட்டியில் இயங்கவிருக்கும்
"லயன்ஸ் வைத்தியசாலை"
"LIONS HOSPITAL"

1-12-83ம் திகதி தொடக்கம் இயங்க இருக்கும் மேற்கூறிய வைத்தியசாலைக்கு கீழ்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சமீபகால வன்செயலினுல் இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| | எண்ணிக்கை |
|---|---|
| 1. டாக்டர்கள் (DOCTORS) M. B. B. S. (வைத்தியசாலை விடுதியில் நிரந்தரமாக தங்கக் கூடியவர்கள்) | 2 |
| 2. டாக்டர்கள் (DOCTORS) M. B. B. S. (நிரந்தரமாக வதியாமல் 4 மணித்தியாலம் தொடக்கம் 10 மணித்தியாலம் வரை வேலை பார்க்கக்கூடியவர்கள்) | 3 |
| 3. பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்கள் (R. M. P.) (வைத்தியசாலை விடுதியில் நிரந்தரமாகத் தங்கக்கூடியவர்கள்) | 2 |
| 4. சிரேஷ்ட தாதிமார் (SENIOR NURSES) | 2 |
| 5. கனிஷ்ட தாதிமார் (JUNIOR NURSES) | 2 |
| 6. பயிலுனர் தாதிமார் (TRAINEE NURSES) | 5 |
| 7. அட்டெண்டன்மார் | 3 |
| 8. தொழிலாளர்கள் (LABOURERS) | 3 |
| 9. காசாளரும் நிர்வாக லிகிதரும் (CASHIER CUM ADMINISTRATIVE CLERK) | 1 |
| 10. சிற்றுண்டிச்சாலை நடத்துனர் (கேள்விப்பத்திர அடிப்படையில்) | |
| 11. மருந்தகப் பொறுப்பாளர் (PHARMACIST) | 1 |

சான்றிதழ்களின் பிரதிகளுடன்கூடிய விண்ணப்பங்கள் 14-11-83 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

CHAIRMAN
HEALTH COMMITTEE
LIONS CLUB OF MAVIDDAPURAM
KUSHIBA BUILDING
MAVIDDAPURAM, TELLIPALLAI.
9712

# வரிப்பணத்தை ஆரம்பத்தில் செலுத்திஞல் 10வீதம்கழிவு!

(கொழும்பு)

வரிப்பணத்தை ஆண்டின் தொடக்கத்திலேயே மொத்தமாகச் செலுத்தும் வரியிறுப்பாளர்களுக்கு பத்து சத வீதக் கழிவு வழங்க மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு ஜனவரி முதலாம் தேதி முதல் இவ்வரிச்சலுகை மாவட்ட அபிவிருத்திச் சபைப் பிரதேசங்களில் வசிக்கும் வரியிறுப்பாளர்களுக்குக் கிடைக்கவுள்ளது.

அபிவிருத்திச்சபைச் சட்டமும் இதை அமுல் நடத்தக் கூடியவிதமாக திருத்தப்படவிருக்கின்றது.

அபிவிருத்திச் சபைத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் உள்ளூராட்சி அமைச்சு மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

வரிப்பணத்தை ஆரம்பத்திலேயே மொத்தமாகச் செலுத்தும் வரியிறுப்பாளருக்கு 10சத வீதக்கழிவு வழங்கும் அதிகாரம் தற்பொழுது மாநகரசபைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுககு இதுகாலவரை அந்த அதிகாரம் வழங்கப்படாதிருந்தது. இதன்காரணமாக மாநகரசபை, நகரசபை எல்லைக்குள் வாழும் வரியிறுப்பாளர்கள் அனுபவித்து வரும் வரிச்சலுகையை மாவட்ட அபிவிருத்திச் சபை எல்லைக்குள் வாழும் வரியிறுப்பாளர் அனுபவித்து வரவில்லை. 1-1-84 முதல் அவர்களும் இவ்வரிச் சலுகையை அனுபவிக்கப் போகின்றனர்.

(திருமலை நிருபர்)

# சட்டவிரோத மின் பாவனை! 25பேர்மீது வழக்கு

(யாழ்ப்பாணம)

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படஇருக்கிறது.

யாழ் மாநகர எல்லைக்குள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள் எனக் கூறப்படும் 25 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. (க)

# இப்படியும் நடக்கிறது

இந்தியாவில் ஒரிஸா எனும் மாநிலம் இருக்கிறது. இந்த மாநிலத்தில் பூரி எனும் இடமுண்டு. இந்த இடத்தில் புகழ்பெற்ற ஒரு ஆலயம் உள்ளது. இதன் பெயர் பூரி ஜெகநாதர் ஆலயம்.

கோவிலைப் புதுப்பிக்க நிதி தேவைப்பட்டது.

ஆலயத்தின் அறங்காவலர்கள் அண்மையில் கூடி ஆலோசித்தார்கள். முடிவு— ஆலய நிதி திரட்ட இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை கோவிலுக்கு அழைப்பது என்று அறங்காவலர்கள் ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

ஆஞல் என்ன நடந்தது?

அந்தக் கோவில் அர்ச்சகர்கள் இந்த யோசனைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ''கோவிலுக்குள் இந்திரா காந்தியை விடமாட்டோம்'' என்று அவர்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கிருர்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம்:

''கோவிலுக்குள் இந்துக்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். இந்திரா காந்தி இந்து அல்ல. அவர் பிராமணப் பெண் என்ருலும் இந்திராவின் கணவர் பார்சி மதத்தைச் சேர்ந்தவர். இந்திராவும் பார்ர்சி மதத்தைச் சேர்ந்தவராகவே ஆகிருர். ஆகவே இந்திராவை கோவிலுக்குள் விட முடியாது'' என்று அர்ச்சகர்கள் ஒரே அடியாகக் கூறிவிட்டார்கள்!

— ஊடுருவி

# கிளிநொச்சி மாவட்ட புதிய அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக திரு. ஏ. ஜெயநாதன் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

திரு. ஜெயநாதன் நியமனம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும், இவர் இன்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் சென்று கிளிநொச்சி மாவட்ட செயலகமாக அமைக்கப்பட்ட பட்டினசபை மண்டபத்தைப் பார்வையிடுவார் எனத்தெரியவருகிறது.

குருநாகலை, மன்ஞர் பகுதிகளின் அரசாங்க அதிபராக முன்னர் கடமையாற்றிய திரு. ஜெயநாதன் யாழ். மாவட்ட காணியதிகாரியாகவும் முன்னர் இருந்தார். கிளிநொச்சி தனிமாவட்டமாகப் பிரிக்கப்பட்ட பின்னர்முதல் அரசாங்க அதிபராக இவர் பொறுப்பேற்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. (மா)

# இன்று கல்வயல் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வயல் கொலை, கொள்ளை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் எடுக்கப்பட்டு இன்று காலைவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

# ஐ. தே. க. உறுப்பினர் ராஜிஞமா

(மன்ஞர்)

மாவட்டசபை ஐ. தே. க. உறுப்பினர் திரு. கயஸ்பெல்டாஞே நேற்று பதவியிலிருந்து ராஜிஞமாச் செய்துள்ளார்.

தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே தாம் தமது பதவியை ராஜிஞமாச் செய்வதாக திரு. பெல்டாஞே தமது ராஜிஞமாக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவரது ராஜிஞமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட மாவட்டச் செயலாளர் திரு. ஜெகா செந்தில்நாதன், இது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# துரையப்பா விளையாட்டரங்கை புனரமைக்க முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கைப் புனரமைப்புச் செய்வதற்குச் சுமார் 3 லட்சம் ரூபா விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேராவிடம் மான்யமாகக் கோரப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சருக்கு, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு .சீ. வி. கே. சிவஞானம் அனுப்பியுள்ளகடிதத்தில் இந்த மான்யத்தைக் கோரியுள்ளார்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக, இந்த விளையாட்டு மைதானம், பாடசாலைகளாலும், விளையாட்டுக் கழகங்களிஞலும் பாவிக்கப்படாமல் கள்ளிமரங்களும், புற்களும் வளர்ந்து காணப்படுகிறது.

விளையாட்டுக் கழகங்களும், மாணவர்களும் மீண்டும் இந்த அரங்கைப் புனரமைத்து நவீனமயமாக்கவேண்டும் என்று கோரியதைத் தொடர்ந்து ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (க.கு)

# உதைபந்தாட்டம் இன்று இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

மன்ஞர் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வந்த, உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டம் இன்று மன்ஞர் சென். சேவியர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் இறுதி மோதலில் நெடுங்கண்டல் சென். அன்ரனிஸ் கழகமும், பனங்கட்டிகொட்டு சென். ஜோசப் கழகமும் மோதும். (வி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை அவரது சமாதி முன்னிலையில் அமைதியாகக் கொண்டாடப்படவுள்ளது. வித்துவசிரோமணி பிரமஸ்ரீ கணேசையர் நினைவுப் பணிமன்றம், இக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (மா)

# கூட்டணித் தலைவர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் இடம்பெறமாட்டாது என்று இப்பொழுது தெரிகிறது.

கொழும்பு வருவதற்குமுன்னர் புதுடில்லியில் வைத்து திரு. பார்த்தசாரதியைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் சந்தித்துக் கூட்டணியின் நிலைபற்றித் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இதேவேளை கொழும்பிலிருக்கும் முன்ஞள் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் கூட்டணியின் உத்தியோகபற்றற்ற நிலையில் திரு. பார்த்தசாரதியைச் சந்திக்கலாம் எனத்தெரிகிறது. (கு)

# வவனியாவுக்கு மாற்றம்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ.செந்தில்வடிவேல் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வவனியா அரசாங்க செயலக தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமது பதவிக்காலத்தில் சிறப்பான முறையில் சேவையாற்றிய இவருக்கு சேவைநல பாராட்டு விழாவொன்றினை பரந்த அளவில் நடாத்துவதற்கு இப்பகுதியில் உள்ள பொது நலஇயக்கங்கள் ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

# மரண அறிவித்தல்

## திருமதி இ. சொர்ணலட்சுமி

திருநெல்வேலி குடியேற்ற திட்டத்தைச் சேர்ந்த திருமதி இராமச்சந்திரன் சொர்ணலட்சுமி (முன்னரி யாழ். வைமன்வீதி) அவர்கள் காலமாஞர். இவர் ராமச்சந்திரனின் மனைவியும். ஜனனகுமாரன், ஜனஞனந்தன் ஆகியோரின் தயாரும், செல்வராஜா, காலஞ்சென்ற திருமதி சிதம்பரம் ஆகியோரின் புதல்வியும், மகாலிங்கம் (ஓமான்), திருமதி சவிரிமுத்துதனலட்சுமி, அன்னலிங்கம் (மே. ஜெர்மன்), பஞ்சலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவர். அன்ஞரின் பூதவுடல் இன்று 8-11-83 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள அன்ஞரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

9774

# மரண அறிவித்தல்

## அ. நாகமுத்து - காங்கேசன்துறை

முன்ஞள் கொழும்பு மேட்டுத்தெரு சரஸ்வதி விலாஸ் உரிமையாளர் திரு. அ. நாகமுத்து காலமாகிவிட்டார். இவர் சுதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பொன்னுப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, வல்லிபுரம், சின்னத்தம்பி, அன்னப்பிள்ளை, குருநாதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலசரஸ்வதி, குணலட்சுமி (ஆசிரியை கிண்ணியா), காந்திமதி, அருணகிரிநாதன் (களஞ்சிய அலுவலர் விவசாய திணைக்களம்), காசிவிஸ்வநாதன் (யாழ். வெறெஸ்ற் தொழில் நிறுவன உரிமையாளர்), தில்லைநாதன் (காங்கேசன் றவல்ஸ்). புவனேஸ்வரி, பார்வதிதேவி (பிரதம தாதி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), சற்குணசக்தி மலாயா) ஆகியோரின் அருமைத் தந்தையும், அருளம்பலம் (முன்ஞள் பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் , சண்முகராஜா (திருக்கோணமலை துறைமுக கொக்சன்), யோகாம்பிகை, சீதாலட்சுமி, இராசையா, இந்திரநாதன் (மலேரியா தடுப்பு அதிகாரி), பரமநாதன் (ஆசிரியர் கோலாலம்பூர்) ஆகியோரின் அருமை மாமஞருமாவார். ஈமக்கிரியைகள் காங்கேசன்துறையிலுள்ள 'தாயகம்' என்னும் அவரது இல்லத்தில் இன்று (8-11-83) மாலை 4 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9773 —திருமதி நாகமுத்து குடும்பத்தினர்.

# யாழ். நகருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருப்பதாவது.

'நகரில் சனத்தொகை அதிகரிப்பதற்கேற்ப வீடமைப்புகளும் அதிகரித்துள்ளது. இதஞல் நகரில் எல்லா இடங்களிலும், மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்கிறது. குறிப்பாக குருநகர், மூஸ்லிம் பகுதிகளில், மக்கள் மிக நெருக்கமாக வாழும் இப்பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதால், சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. சமூக சுற்ருடல், தொழில் அமைப்பில் தாக்கம் ஏற்படுகிறது. அரசு இவ்விரு விடயங்களில் உடன் நடவடிக்கை எடுக்காவிடில் மிகப்பெரும் பிரச்சனை உருவாகும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்' (க)

# அநீதி எங்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:-

''அண்டை நாட்டு உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறது என்பது அர்த்தமில்லாத குற்றச்சாட்டு. இதில்எதுவித உண்மையும் இல்லை.

''உலக நாடுகளில் இடம் பெறும் தவறுகள்பற்றிய கருத்துக்களை வெளியிடுவதில் தவறவில்லை. கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் உரிமை உண்டு.,' (கு)

# மரண அறிவித்தல்

## தி. க. இராஜமார்த்தாண்டன் B.A.

[இளைப்பாறிய ஆசிரியர்]

காலஞ்சென்ற திருக்கோணமலை கனகசுந்தரம்பிள்ளையினதும், திருமதி சுந்தரம்மாளினதும் மகனும், காலஞ்சென்ற தி.க. இராஜராஜன், திருமதி இரங்கநாதன் செல்வநாயகி, தி. க. இராஜசேகரன், தி. க. இராஜேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திரு. C N. தேவராஜனதும், திருமதி இராஜலக்ஷ்மியினதும் மருமகனும், காலஞ்சென்ற தமயந்தியின் அன்புக் கணவரும், திருமதி சாவித்திரி நவரத்தினம், B. R. தேவராஜன், அகஸ்தியன், ஆகியோரின் மைத்துனருமான தி. க. இராஜமார்த்தாண்டன் திங்கட்கிழமை (31-10-1983) சிவன்பாதமடைந்தார். அன்று மாலை ஈமக்கிரியைகள் நடந்தேறின. உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தி. க. இராஜசேகரன்,
தெல்லிப்பழை.

(9762)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49, Telephone: 22389 —24126.